---


தாயுமானவரின்
மெய்ப்பொருள்
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# தாயுமானவரின்

## மெய்ப்பொருள்

மன்னார்குடி பானுகுமார்

ராஜம் பதிப்பகம் EBOOK PUBLISHERS

# பொருளடக்கம்

1. **மெய்விளக்கக் கல்வி வேண்டும்?**

2 .**தெய்வம்** (மெய்ப்பொருள்) **படும்பாடு**

3. **மெய்ப்பொருளா? கடவுளா?**

4. **மூன்று வகை மெய்கள்**

5. **எனக்கு வாய்ப்புத் தா?**

6. **மெய்ப்பொருளின் இயல்புகள்**

7. ஆனந்தமயமான மெய்ப்பொருளே

8. தாயுமானவரின் இறைத்தத்துவம்.

9. அறிவேதான் தெய்மென்றார் தாயுமானவர்

10.**மெய்ப்பொருள் எங்கிருக்கிறது?**

11.**நிறைவுரை.**

# 1.மெய்விளக்கக் கல்வி வேண்டும்.

தமிழ்நாடு தத்துவ தரிசனத்தின் விளைநிலம். சங்க காலம் தொட்டு மெய்ப் பொருட் சிந்தனை தமிழர்களின் எண்ணக் கருவில் உருவாகி இலக்கிய வடிவம் பெற்றமையை பண்டைய இலக்கியப் பனுவல்கள் காட்டுகின்றன.

"நீர் வழிப்படூஉம் புணை போல், ஆருயிர் முறை வழிப்படூஉம்" என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிந்தித்துப் பார்த்தவர் தமிழர்.

உடல், உள்ளம், உயிர் என்ற அகநோக்குப் பார்வை "கடஉள்" சிந்தனையை வளர்க்கத் தொடங்கியது. தமிழநாட்டில் தோன்றிய மெய்ப் பொருட் சிந்தனைக்கு உரமேற்றி வளமூட்டி வளர்த்த பெருமைக்கு உரியவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆவர்.






**தமிழ் இலக்கிய வளர்ச்சியில் வரலாற்றில் பக்தி இலக்கிய காலம் குறிப்பிடத்தக்க காலம் மெய்ப் பொருள் அறிவைத் தந்த காலம் என்றே கூறலாம்.**

**“நான்ஆர் என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்” என்ற ஞானக் கேள்விகள் “திருவாசகம்”என்னும் மெய்ப்பொருள் அனுபவ நுலைத் தந்தது.**

**பரம் பொருளான திருமாலைச் சிந்தித்த மாறன் சடகோபர், “அவரவர் தமதமது அறிவிற் வகை வகை அவரவர் இறையவர்” என்னும் ஞானப் பாசுரத்தை அளித்தார்.**



**வாசகமும், வாய்மொழியும் தமிழர் தம் மெய்ப் பொருட் சிந்தனைக்கு தோரண வாயில்களாய் அமைந்தவை.**

**இலக்கிய வளர்ச்சி இவ்வாறு பீடு நடைபோட்டு வளர்ந்த காலத்தில், இதற்கு இணையாக நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழிகள், சித்தத்தை வென்றவர்களின் சிந்தனையாகப் பெரு வளர்ச்சி பெற்று வந்ததை நாமறிவோம்.**

**“அறிவானுந் தானே அறிவிப்பான்தானே அறிவாய் அறிகின்றான் தானே” என்று அம்மையார் அருளியது போல அறிவு நிலையில் சிந்தித்தவர்கள் சித்தர்கள்.**

**கடவுளைக் காண முயல்பவன் பக்தன், கண்டு தெளிந்தவன் சித்தன் என்பது உலகோர் வாக்கு.**

**“செயல்வேகம் கொண்டவனே சித்தன், சிந்தனையில் புயல் வேகம் கொண்டெழுத்தில் பொறித்தான் பல கலைகள்” என்பது வேதாத்திரியாரின் மெய்ப்பொருள் நோக்கு.**

---



**இத்தகைய சித்தர்களின் வரிசையில் திருமூலர் மரபில் வந்த மௌனகுருவின் மாணவர்தான் நமது தாயுமானவர். இவர் செய்த 1452 பாடல்களும் தமிழின் முதன்மைத் தமிழன் முடிவிலா ஞானக் களஞ்சியம்.**



## மெய்விளக்கக் கல்வி

**மனித குலத்தில் காலத்தால் இடத்தால் அவ்வப்போது ஏற்பட்ட தேவையுணர்வால், ஏற்பட்ட செயல்களும கருத்துக்களும் பல ஆயிரமாயிரம தலைமுறைகளாக, சிந்தித்துத் திருத்தம் பெறாத காரணத்தால் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.**

**விஞ்ஞான அறிவால், விரைவு வாகன வசதிகளால், துரிதமான செய்தி போக்குவரத்து சாதனங்களால், உலக மக்களுடைய பொருளாதாரம் அரசியல் இரண்டும் ஒன்றோடு ஒன்று ஊடுருவி இணைந்து கொணடு வருகிறது.**

**இக்காலத்திற்கு ஏற்ப தேவையற்ற பழக்கப் பதிவுகளை வாழ்வில் புகுத்தி மனித குலம் பிணக்கொழித்து அமைதியில் வாழ வேண்டும்.**

**இம்மாற்றம் வெற்றியாக மனித குலச் சீரழிவு இன்றி அமலுக்கு வரவேண்டுமெனில், மெய்விளக்கக் கல்வி அனைத்து நாடுகளிலும் பள்ளி மாணவ வயதிலிருந்தே அறிந்து கொள்ள ஏற்றபடி பாடத்திட்டங்களில் பரவ வேண்டும்.**

**இப்பெரிய மாற்றம் சமுதாய சீர்திருத்தமாக பிணக்கின்றி, போரின்றி நடைபெற சில விஞ்ஞானிகள், கல்வித்துறையினர், ஆன்மீக அறிஞர்கள் இன்று ஒன்று கூடி பொறுப்பேற்க வேண்டும்.**

**போருக்காகவும் போரச்சத்தோடும் செலவிடும் பொருள், மனித முயற்சி இவற்றில், நூற்றில் ஒரு பங்கு செலவிட்டாலே சில ஆண்டு காலத்திற்குள் அமைதியான முறையில் சமுதாயச் சீர்திருத்தமும் உலக அமைதியும் காணலாம்.**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

**எல்லாவிதமான கல்விகளையும் முழுப்பயன் விளைக்கச் செய்யும் இம் மெய் விளக்கக் கல்விக்கு வித்திடுவதே தாயுமானவரின் மெய்விளக்கம் என்ற இந்த தொகுப்பு.**

**தாயுமானவரின் மெய்விளக்கத்தின் மதிப்புணர்ந்து நமது கடமைகளை ஆற்றி மன நிறைவு வேறுவோம்.**

**நாம்மை உருவாக்கி வளர்த்து வாழவைக்கும் இயற்கைக்கும், பொருள், கல்வி, பாதுகாப்பு, தொண்டு இவற்றால் நமது வாழ்வுக்குச் சிறப்பளிக்கும் மனித சமுதாயத்திற்கும் நாம் ஆற்ற வேண்டிய கடமையும் இதுவே.**

**வழக்கமான வணக்கங்களுடனும் வாழ்த்துக்களுடனும்**

**மன்னார்குடி பானுகுமார்.**

**செங்கற்பட்டு.** **Mailid.** **banukumar.v@gmail.com**

**14.082019**



## 2. தெய்வம் (மெய்ப்பொருள்) படும்பாடு

**இறை வழிபாட்டின் மதிப்பு உணர்ந்த முதற் காலத்தில் ஆன்மீகத் துறையில் சிந்தனை செலுத்திய மகான்கள் அகத்தவத்தின் மூலம் மெய்ப்பொருள் கண்டார்கள். அதை மொழி விளக்கம் செய்த போது அது வேதாந்தம் ஆயிற்று.**

**அக்காலத்தில் அறிவில் போதிய வளர்ச்சி பெறாத மக்களுக்கு பக்தி வழி போதனை தொடங்கியது. இறைவனை தனித்த சன்னியாசியாக காட்டி அதற்கு ஏற்ற உருவம் கற்பித்து வணங்கச் செய்தார்கள்.**

**மத்திய காலத்தில் பக்தி வழியில் இறைவழிபாடு மாற்றம் பெற்றது. மனிதனுடைய மன இயல்பை வைத்துக் கடவுளைக் கற்பித்தார்கள்.**

**தனியாக இறைவனுக்குச சிலை வைத்து வணங்குவது சிலருக்குப் பொருந்தவில்லை.**

**இறைவன் தனியாக இருந்து கண்டு பரிதாபப் பட்டார்கள். இறைவனுக்கு அருகில் சக்தியை வைத்து வணங்குவதற்கு முற்பாட்டார்கள். தெய்வங்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டது.**

மத்திய காலப் பிற்பகுதியில் தெய்வங்களைப் பழிவாங்க நினைத்தார்கள் சிலர்.

மனிதன் குழந்தைகளைப் பெற்று படும்பாட்டை தெய்வமே பட்டுப் பார்க்கட்டும் என்ற கருத்தில் தெய்வங்களுக்குப் பிள்ளைகளை உருவாக்கினார்கள்!

தற்கால் விஞ்ஞான யுகத்தில் பக்தி மார்க்கத்தில் ஒரு புதுமை மலர்ந்தது. கடவுளுக்கு அலங்காரம், பொன், வைர நகைகளும், வாண வேடிக்கை முதலியனவும் கூட்டப்பெற்றன.

காலத்திற்கு ஏற்ப தெய்வங்களுக்கு ஆடைகளும் மாற்றப்பட்டன. முற்காலத்தில் காட்டு மிருகங்களின் தோல்கள் உடுத்தப்பட்டன.

பிறகு நார் பட்டு உடைகள், நைலான் துணிகள் உடுத்தப்பட்டன. இக்காலத்தில் பட்டுத் துணிகள் அணியப்பட்டு வருகின்றன.

மனிதனை படைத்த கடவுள் மனிதனுக்கு அறிவாற்றலை அளித்தது. அறிவில் திசைமாறிய மனிதன் தெய்வத்தையே அல்லலுக்கு உள்ளாக்கி விட்டான்.

தெய்வமே தானாகவும் உள்ளது என்ற உண்மையை பெரும்பாலோர் உணரும் வரையில் மனிதன் படும்பாடெல்லாம் தெய்வம் படுவதாகக் காட்டும் நகைச்சுவை நிகழச்சிகள் நடந்து கொண்டுடிருக்கும்.

தாயுமானவரின் மெய்விளக்கம் அந்த முற்றுப் புள்ளியை வைக்கும் என்பதில் ஐயமில்லை.

# 3.மெய்ப்பொருளா? கடவுளா?

**கடவுள் என்பது, ஒரு மெய்ப்பொருள்.**

**கடவுள்! மெய்ப்பொருள்!**

**ஒரு புதிர்! அதிலும், புரியாத புதிர்!**

**இந்தப் புதிருக்கு, சரியான தெளிவான நிறைவான விடை கண்டுள்ளாரா? இல்லை.**

**இனி வரும் காலங்களிலாவது இப்புதிருக்கு விடைக காண் முடியுமா? என்றால், அதுவும் முடியா.**

**ஏன்?**

**இப்புதிருக்கு விடை காண, மனிதனின் உள்ள அந்த ஆறு அறிவு மட்டும் போதாது என்று புலனாகிறது.**

---

**“அறிந்தது அணு அளவு**

**அறியாதது?....**

**கோடானகோடி அண்டங்கள் அளவு”**

**ஒவ்வொரு மனிதனும் பெற்றுள்ள ஆறறிவு என்பது, அணு அளவிற்குள் அடக்கமாகி விடுவது. அணு அளவேனும் அறிய முயற்சி செய்வது.**

**ஆனால், அணு அளவைக் கூட, எட்ட முடியாதது. அறிதோறும் அறியாமையே காண்பது.**

**இந்த நிலையில், கோடானுகோடி அண்டங்கள் அளவிலான அறிவு பெற்ற ஓர் உயிர், உருவாக்கம் பெறுமானால், அந்த உயிரினால்தான் கடவுள் என்னும் மெய்ப்பொருளுக்கு விடை காண முடியும்**

## கடவுள் பற்றிய பார்வைகள்

**அந்தக் கடவுள் பற்றிய கருத்து ஆக்கங்களில்தான் எத்தனை பார்வைகள்! எத்தனை கோணங்கள்! எத்தளை கோலங்கள்!**

**அப்படியானால், கடவுள் உண்டா? இல்லையா?**

**அதை உறுதி செய்யவேண்டுமானால், நமக்குள்ள அந்த ஆறறிவு போதாது. ஆறறிவுக்கு மேல்அறிவு பெற்ற**

**மனிதன் அல்லது மெய்ஞ்ஞானி இன்னும் பிறக்கவில்லையா?**

**கடவுள் உண்டு என்பார் பார்வை சரியா? தவறா?**

**இந்த முரண்பாடு போதாது என்று, கடவுள் உண்டு என்பார் "பார்வை"களில்தான் எத்தனை எத்தனை வேபறுபாடுகள். மாறுபாதடுகள்!**

**"கடவுள் ஒன்றே" என்பார் சிலர்.**

**"கடவுள் பலர்" என்பா சிலர்**

**இவ்விரு பார்வைகளிலும் எது சரியானது? விடை காண சான்றுகள் உண்டா?**

**கடவுள் ஒருவரே" என்பவர்களுடைய பார்வையிலும் ஏராளமான முரண்பாடுகள்!**

**"அல்லாவே கடவுள்? என்பர் ஒரு பிரிவினர்.**

**பரமபிதாவே கடவுள்" என்பார் ஒரு சிலர்.**

**"பரமசிவனே கடவுள்" என்பார் இன்னும் சிலர்.**

**"திருமாலே கடவுள்" என்பார் சிலர்.**

**இதற்கும் மேல் சென்று, "தத்தம் கடவுளரே மிக உயர்ந்த கடவுளர்? என்றும், "பிறர் கடவுளர் உயர்ந்த கடவுளர் அல்லர்" என்று சிலர் கூறுவர்.**

**"கடவள்" ஒருவரே" என்று ஆனபின், எல்லாக் கடவுளர் பெயர்களும் அந்த ஒரு கடவுளைத் தானே சுட்டும்?**

**அப்படி இருக்க, ஒரு மதத்திற்ககுரிய கடவுள் எப்படி உணர்ந்தவர் ஆக முடியும்?**

**இன்னொரு மதத்திற்கு உரிய கடவுள் எப்படித் தாழ்ந்தவர் ஆக முடியும்,**

**இப்படிக் காண்பது எல்லாம், குறை மனத்தார், கறை மனத்தார் பார்வைகளே. நிறை மனத்தார் பார்வைகள் அல்ல என்று துணிந்து நாம் கூறலாம்.**

## கடவுளுக்கு உருவம் உண்டா?

**கடவுளுக்கு உருவம் உண்டா? இல்லையா? இது அடுத்த கேள்வி.**

**“கடவுளுக்கு உருவம் உண்டு” என்பார் சிலர்.**

**“கடவுளுக்கு உருவம் இல்லை” என்பார் சிலர்.**

**“கடவுள் அருருவானவர்” என்பார் சிலர்.**

**இதில் எது சரியான கருத்து? கேள்வி வினாவாகவே நிற்கும். விடை கிடைக்காது.**

**உலகம் கண்ட மெய்யுணர்வாளர்களுள்**

**“கடவுளைக் ஊனக் கண்ணால் கண்டேன்” என்பா் சிலர்.**

**“கடவுளை மனக் கண்ணால் காணலாம்” என்பார் சிலர்.**

**“கடவுளை ஞானக் கண்ணால் காணலாம்” என்பார் சிலர்.**

## அப்படியானால் எந்த கூற்று சரி?

---

**கடவள் காணப்படும் பொருள் அன்று. அது,உணரப்படும் பொருள் என்று கொள்ளலாமா?**

**"நானே கடவுள்" என்பர் சிலர்,**

**"நான் கடவுளின் மறு பிறப்பு" என்பர் சிலர்.**

**"நான் கடவுளின் அவதாரம்" என்பர்.**

**உண்மையான மெய்யுணர்வு பெற்ற யார் ஒருவரும் இப்படிக் கூறுவார்களா?**

**அப்படியானால் "நடமாடும்தெய்வங்களே" என்று மானுடத்தைப் பார்த்து வியந்த திருமந்திரம் வார்த்தைகளின் பொருள் என்ன?**

**அப்படியானால் கடவுள்?**

**நாம், தொடங்கிய இடத்திலேயே மீண்டும்.................!**




# 4. மூன்று வகை மெய்கள்

---

- **மெய்ப்பொருளைக் காண முடியாது. சோதனைகள் வழி நிரூபிக்க முடியாது. ஆனால், காரண காரியங்கள் கொண்டு உய்த்துணரமுடியும்.**

**உலகில் உளள அனைத்து மொழிகளிலும் எல்லாச் சொற்களும் பொருள் குறித்தனவாகவே அமைந்து உள்ளன.**

**பொருள் இல்லாத சொல் இலை என ஒன்றும் இல்லை. இருப்பினும் தமிழ் எழுத்துக்கள் அனைத்தும் உயிர் உள்ளவை. அவை மந்திர சொற்கள். அந்த சொற்களில் உயிரோட்டம் ஓடிக் கொண்டிருக்கும்.**

**உலக மொழிகளில், ஒரே பொருள் கொண்டனபோல் தோன்றும் சொற்கள், பல நுட்ப வேறபாடுகளைக் கொண்டனவாக அமைவது உண்டு.**

**அவ்வகையான தமிழ்ச் சொற்கள்.**

1. **உண்மை**
2. **வாய்மை**
3. **மெய்மை**

**என்றும் மூன்று சொற்களாகும். இவை மூன்றும ஒரே பொருள் தருவனபோல் தோன்றுகின்றன.**

**இந்த மூன்று மை சொற்களும் ஒரே பொருள் தருவனபோல் தோன்றுகின்றன.**

**பலரால், ஒரே பொருளினவாகக் கொள்ளபட்டும் உள்ளன. இவற்றை வேறுபடுத்திக் கண்டவர்களும் சொன்னவர்களும் உண்டு.**

அவற்றின் பொருள்களை வேறுபடுத்திக் கண்டவர்கள், உண்மை என்பது உள்ளத்தோடு தொடர்புபட்டது என்றும், வாய்மை என்பது வாயோடு தொடர்புபட்டது என்றும் நுட்பமாகப் பிரித்திரிய முயன்றுள்ளனர்.

மேலும் இச்சொற்களை சற்று விரிவுபடுத்தி, உண்மை என்பது, எண்ணத்தின் அளவிலான வெளிப்பாடு என்றும், வாய்மை என்பது சொல் அளவிளான வெளிப்பாடு என்றும், மெய்ம்மை என்பது, செயல் அளவிலான வெளிப்பாடு என்றும கொண்டுள்ளனர்.

## உண்மை.

உண்மை என்பதை உள் + மை (மெய்) எனப் பிரித்துக் காணலாம். இதற்கு உள்ள + தன்மை = உள்ளதாம் தன்மை எனப் பொருள் கொள்ளலாம். அதாவது , “ஒன்றினிடத்து அமைந்துள்ள இயல்பு” என்ற கொள்ளலாம்.

இன்று வழங்கப்படும் அறிவியல் விதிகளை உண்மை எனலாம்.

உண்மை என்பது எந்தச் சூழலிலும், எங்கும் யாராலும் எப்போதும் நிரூபிக்கப்படுவதாய் அமைவது எனலாம். இது பருப்பொருள் அளவினதாகவும் அமையலாம். நுண்பொருள் அளவினதாகவும அமையலாம்.

**“உண்மை அறிவு “** **((குறள்.3783)**

**“உலகத்தார் உண்டு என்பது “ (குறள்.850)**

## வாய்மை

வாய்மை என்பதற்கு வாய்க்கும் தன்மை எனப் பொருள் கொள்ளலாம்.

---

**சங்க இலக்கியங்களில் வரும்**

**"வாய்மொழி (மந்திரம்) (தொல்.1434)**

**வாய்வான்**

**வாய்வேல்**

**"பொய்யறியா வாய்மொழி (மது.19)**

**"வெல்லும் வாய்மொழி" (புறம்388.9)**

**என்னும் தொடர்கள், வாய் என்பதற்குத் தப்பாது வாய்த்தல் என்னும் பொருள் தருவனவாக அமைந்துள்ளன.**

**வேதங்கள் "வாழ்மொழி என வழங்கப்பட்டதும் இங்கு கருதற்பாலது. திருக்குறளுக்குரிய பல்வேறு பெயர்களில் ஒன்று "திருவள்ளுவர் வாய்மொழி" என்பது.**

**இதற்குத் திருவள்ளுவார் -வழங்கிய தப்பாது வாய்க்கும் நல்லுரைகள் எனப் பொருள் கொள்ளலாம்.**

## மெய்மை

**"மெய்மை" என்பதற்கு மெய்யாம் தன்மை உனப் பொருள் கொள்ளலாம்.**

**மெய்யியல்**

**மெய்ப்பொருளியல்**

**போன்றவற்றில் "மெய்" என்னும் சொல் "தத்துவம்" என்னும் பொருளில் வழங்கப்பட்டிருப்பதைக் காணலாம்.**

**"மெய்" என்பது, கருத்துப் பொருள் எனக் கொள்ளலாம்.**

-----

**திருவள்ளுவரும், “மெய்பொருள்” (குறள்249, 355, 356, 423, 857)**

**மெய் உணர்தல்” (குறள் 354)**

**“யாம்மெய்யாக் கண்டவை” (குறள்.300)**

**என்னும் தொடர்களில், மெய் என்பதற்குக் கருத்துப் பொருள் என்னும் அளவிலேயே பொருள் கண்டுள்ளதை அறியலாம். இது உண்மை பொருளிலிருந்து வேறுபட்டதாகும்.**

**மெய்ப்பொருளைக் காண முடியாது. சோதனைகள் வழி நிரூபிக்க முடியாது. ஆனால், காரண காரியங்கள் கொண்டு உய்த்துணர முடியும். அந்த உய்த்துணர்வு என்பது. அவரவர் அறிவின் தன்மைக்கு ஏற்ப வேறுபடும். மாறுபடும்.**

**ஆக என்ன சொல்ல வருகிறோம்...............**

**“உண்மை” என்பது, உலகில் உள்ளது. ஆராய்ந்து அறியப்படுவது. நிரூபிக்கக் கூடியது. உறுதிப்படுத்தப்படுவது.**

**“வாய்மை” என்பது, சொன்னது தப்பாது வாய்க்கும் தன்மையது. அது, சொல்லாகவும் இருக்கலாம். எழுத்தாகவும் இருக்கலாம்.**

**“மெய்மை” என்பது. காரண காரியங்கள் கொண்டு உய்த்துணரப்படுவது. அவரவர் மெய்யுணர்வின் திறத்திற்கு ஏற்ப மாறுபடுவது. நிரூபிக்க முடியாதது.**

**இந்தவயையில் நோக்கின் “கடவுள்” என்பது உண்மைப் பொருள் அன்று. அது ஒரு மெய்ம்மைப் பொருள். அதனை நிரூபிக்க முடியாது. ஆனால், மெய்யுணர்வாளர்களால், அவரவர் மெய்யுணர்துவுத் திறத்திற்கு ஏற்ப உய்த்துணரப்படும்.**

**“கடவுளைக் காண்டல்” என்பது, மெய்யுணர்வாளர் தம் மனக்கண்ணால் - மெய்யுணர்வால், காண்பதே அன்றி, புறக்கண்ணால் காண்பது அன்று. அவ்வாறு காணவும் முடியாது.**



## 5. எனக்கு வாய்ப்புத் தா இறைவனே

**தாயுமானவர் “பொருள் வணக்கம்” என்ற தலைப்பில் 12 பாடல்களும், எந்நாள் கண்ணியில் பொருள் இயல்பு என்பதுபற்றி 19 கண்ணிகளும் பாடியிருக்கிறார்.**

**பொருள் என்ற சொல்லைப் பல பொருள்களில் 100 க்கும் மேற்பட்ட இடங்களில் எடுத்தாள்கின்றார் தாயுமானவர்.**

**மூன்றே இடங்களில் மட்டும்தான் “மெய்ப்பொருள்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறார் தாயுமானவர்.**

**பொருள் எது? மெய்ப்பொருள் எது? என்பன இந்தக் குறிப்புகளிலிருந்து நாம் ஓரளவு விளக்கம் பெறலாம்.**

**நமக்கு மெய்ப்பொருளை உணர்த்தியவர்கள் எல்லாம் நிலையொமையால் மறைந்து விட்டார்கள்.**

**மெய்ப்பொருளோ என்றும் நிலைத்திருக்கின்றது. அந்த மெய்ப்பொருளை உணர “எனக்கு வாய்ப்புத் தா இறைவனே” என வேண்டுகிறார் தாயமானவர்.**

**மெய்ப்பொருளை அறிய விரும்பாத ஓர் ஏழையாக நான் மட்டும்தான்இருக்கிறேன் வேற யாரேனும் இருப்பாரோ? எனக் கேட்கிறார்.**

**“மின்னைப் போன்ற அகிலம் என்று அறிந்து, மெய்ப் பொருளாம்**

**உன்னைப் போன்ற நற்பொருள் இல்லைஎன்று ஓர்ந்து,**

**பொன்னைப் போன்றநின் போதம்கொண்டு, உன்பணி பொருந்தா**

**என்னைப் போன்றுஉள ஏழையர் ஐயஇங்கு எவரே? (ஆசைஎனும்19)**

## மெய்ப்பொருளை அறிய வழி எது?

**மெய்ப்பொருளை அறிய வழி எது? அடுத்ததாக தாயுமானவர் சிந்திக்கிறார்.**

**தெரிய வேண்டிய ஒன்றைத் தெரிந்து கொள்ள "மை" போட்டுப் பார்ப்பது ஒரு பழக்கம். இதனால் அனைத்தையும் தெரிந்து கொள்ளலாம்.**

**இந்தப் பழக்கம் தாயுமானவர் காலத்தில் இருந்திருக்க வேண்டும்.**

**பேரறிவாகி மெய்ஞானம்" என்னும் மை கிடைத்தால், அதன்வழி இறையாகிய மெய்ப்பொருளைப் பார்க்க இயலுமே என ஏங்குகின்றார் தாயுமானவர்.**

**எனவே இறையை அறிய, மெய்ப் பொருளை உணர, காரண அறிவு முதிர்ச்சியே வழி என்பது தெளிவாகின்றனது.**



**"ஈனம்இல்லா மெய்ப்பொருளை இன்மையிலே காண வெளி**

**ஞானம் எனும் அஞ்சனத்தை நான் பெறுவது எந்நாளோ?**

**என்னால் இயலும்" என்ற ஆணவத்தோடு தன்னம்பிக்கை மிக்க ஒருவன் மெய் பொருளைத் தேடுவானாயின் அவன் தேடியதை அடைவானர் என்பது கேள்வி இல்லை.**

**அந்த மெய்ப் பொருளைக் காண்பதற்கு அவன் புலன்கள், புறக் கண்கள் போதா, இறைவன் திருவருளாகிய கண்ணை அவன் முதலில் பெற்றால்தான் அவன் விருமபுவது கிடைக்கும்.**

**அதுவும், அத் திருவருட் கண்களே. மெய்ப்பொருளை அவனுக்குக் காட்ட வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி, எனும் மாணிக்கவாசகரின் வரிகள் இங்கு என்னற்பாலது.**



**"காட்டுத் திருஅருளே கண்ஆகக் கண்டு பர**

**வீட்டின்இன்ப மெய்ப்பொருளை மேவும்நாள் எந்நாளோ?**

**மெய்ப்பொருளாம்….நற் பரம்பொருள், ஈனமில்லா மெயயப் பொருள், பர வீட்டின் இன்ப மெய்ப்பொருள் என்பன பேரறிவாகிய, (Ultimate truth) உண்மையின் முடிபாகிய இறையையே குறிக்கின்றன.**

**இவை சொல் ஆராய்ச்சி ஆகிய புறச்சொல் ஆராய்ச்சியால் கிடைத்த செய்திகள்.**

**தாயுமானவர் பாடல்கள் முழுவதிலும், அமைந்துள்ள "பொருட்" கருத்துக்களைப் பார்த்தால், எது பொருள், எது மெய்ப்பொருள் என்பது புலனாகும்.**

---

**பொருள், நிலையாமை உடையது. அழிவது. அதனைப் பலவாறாக, அதன் பண்புகளைப் பல அடையோடு விளக்குகின்றார் தாயுமானவர்.**

- ஆவி உடல் பொருள் (**அந்தமான.10**)
- உடல் பொருள் ஆவி மூன்றும் (**ஆகார.18**)
- உடல் பொருளும் யானும் (**தன்னை.10**)
- உன்னை உடலை உறு பொருளை (**உடல்.71**)
- உருநீடுஉயிர் பொருளும் ஒக்க (**உடல்.77**)
- வைத்த பொருள் உடல்ஆவி (**பெற்றவட்.7**)
- உள்ள பொருள்ஆவியுடன் மூன்றும் (**பரா.236**)

**என உடைமைகளாகிய பொருட்கள், நிலையற்ற பொருட்கள் குறிக்கப்படுகின்றன.**

**இவற்றின் தன்மை,**

- பொய்ப் பொருளில் வாஞ்சை (**ஆனந்தமான.10**)
- நில்லாப் பொருளை நினையாதே (**உடல்.55**)
- சொல்லாப் பொருள் திரள் (உடல்.55)

**எனக் குறிக்கப்படுகின்றது.**

**இவை தவிர செல்வம் என்ற நிலையில் மட்டுமன்றிப் பொருளாகவும் பொருள் பயன்படுகின்றது.**

- எப்பொருட்கும் எவ்விடத்தும் (**பொருள்.5**)
- நல்ல பொருள் இன்பம் (**உடல்.69**)
- அறம்ஆதி பொருள் உரைப்ப (**தேசோ.10**)
- பயன்அருளப் பொருள்கள் பரிவாரம் ஆகி (**ஆகார.10**)
- பெரு பொருளை (**ஆகார.27**)
- பொருள் (**தன்னை.7**)

- பொருளைப் பூவைப் பூவையரைப் பொருள் என்று (தன்னை.8)
- வாய்த்த பொருள் (ஆசை.21)
- என்னைப் பொருளாகப் பண்ணி (கல்லா.29)

என்பன இத்தகையன.

பொருண்மை என்னும் பொருளிலும் இந்தசொல் தாயுமானவரால் எடுத்தாளப்படுகின்றது.

- சன்மார்க்க ஞானமதின் பொருளும், வீறு சமய சங்கேதப் பொருளும் (ஆகார.12)
- சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே (பரா.50)
- சொல்லால் தொடர் பொருளால் (பாயப்.29)
- சொல்லும் பொருளும் தொடரா அருள்நிறைவில் (பரா.230)

இதைத்தவிர "பொருள்" குறிப்பு அனைத்தும் மெய்ப் பொருளாகத் தாயுமானவர் எதைக் கருதினாரோ அதனையே சுட்டிக் காட்டி வந்ததாகத் தோன்றுகின்றது.

அருகி "மௌனியும்" நட்பு போன்றனவும், பெரும்பான்மை இறைவனும் இங்குப் பொருளாக, நிலைபெறும் பொருளாகக் கருதப்படுகின்றனர் போலத் தெரிகின்றது.

"மோனம் பொருள் எனக் கண்டிட (பாயப். 15) என அறிவின் எல்லையான மௌனத்தையும், நாடும் பொருளான நட்பே (பரா.16) என நட்பையும் உருவக நிலையில் இறையாக்கினார் எனச் சொல்லின் அது மிகையாகாது.




# 6. மெய்ப்பொருளின் இயல்புகள்

**மெய்ப்பொருளை குறிக்க வரும் போது மிகப் பல அடைகளோடு இறையின் இயல்புகளை தாயுமானவர் தமது பாடல்களில் குறிப்பிடுகிறார்.**

- துரிய நடுவில் இருந்த பெரிய பொருள் (பொருள்.8)

---

- பேசரும் அனந்த பத ஞான ஆனந்தமாம் பெரிய பொருளை பணிகுவாம். (திவருள். 2)
- பெரிய பரி பூரணமாம் - நித்த நிர்மல சகித நிஷ்ப்ரபஞ்சப் பொருளை (திருவருள்.3) (என அது இப் பிரபஞ்சத்துக்கு உரியதல்ல என்பதும்),
- தெரிய அரியதாய்க் கலந்த எந்தப் பொருள் அந்தப் பொருள் (பொருள்.3) என அது எங்கும் நிறைந்தமையும்.
- பொருளாகக் கண்ட பொருள் எவைக்கும் முதற்பொருளாகி (பொருள்.7)
- தன்னையன்றி ஒரு பொருளில் இல்லாத எப்பொருட்கும் தான் முதலாய் (மண்டல.2) என அனைத்திற்கும் மூலமாயினமையும்,
- இருள்தீர விளங்கு பொருளியா அந்தப் பொருளினை யாம் இறைஞ்சி நிற்பாம் (பொருள் 7) என அதுவே ஒளிப்பிழம்பாயினமையும்
- தீதில் பரமாம் பொருளை (பொருள் 5)
- மனக்கோது அகற்றும் பரம்பொருளே (பயாந் 16)
- விளங்கு பரம் பொருளே (கல்லா25) என அதன் பரத்தொடர்பும் தன்மையும்,
- அருமறையின் சிரப்பொருளாய் (பொருள்.8)
- உன்னைப் போன்ற நற் பரம்பொருள் இல்லை (ஆசை 19)
- சுருதி முடிவான பொருளே (தேசோ.11) என அது வேதமுடிவாயி அமையும்.
- வான் பொருளாகி எங்கும் நீ இருப்ப (ஆசை.38)
- வாக்குமன மணுகாத பூரணப் பொருள் (தேசோ.10)
- சாந்தபதப் பரம்பொருளே ( ஆசை 21)
- பரிபூரணமாம் பொருள் (ஆகார.28)
- பொருளே நின் பூரணம் மேலிட்ட காலம் (கல்லா.12) என பூரணவியல்பும்,
- வடிவில்லாச் சுத்தவான் பொருளே (பன்மாலை.3)
- மறை முடியிருந்த வான் பொருளே (ஆசை.37)
- சுகவான பொருளே 9பாயப்.43)

---

- உள்ள வான்பொருட்டு தோற்கவோ வந்தேன் நான் (ஆனந்தக்.25)
- இருள்தீர விளங்கு பொருளியாதந்தப் பொருளினை யாம் இறைஞ்சி நிற்பாம் (பொருள்.7) என அதுவே ஒளிப்பிடம்பாயினமையும்,
- தீதில் பரமாம் பொருளை (பொருள்.5)
- உன்னைப் போன்ற நற் பரம்பொருள் இல்லை (ஆசை.19)
- சாந்தப்பதப் பரம்பொருளே (ஆசை.21)
- மனக்கோதகற்றும் பரம்பொருளே (பாயந் 167)
- விளங்கு பரம் பொருளே (கல்லா.25) என அதன் பரத்தொடர்பும் தன்மையும்.
- போக்குவரவற்ற பொருளே (சின்மயா.4) எந்.பொரு.4)
- மன்னைப் பொருள் (தன்னனை.1)
- எனவதன் நிலைபேறும். கூழ் வெளிப்பொருள் (வம்பனேன். 6)
- அருமறையின் சிரப்பொருளாய் (பொருள்.8)
- சுருதி முடிவான பொருளே (தேசோ.11) என அது வேதமுடிவாயினமையும்.
- வான்பொருளாகி யெங்கு நீயிருப்பு (ஆசை.38)
- சுகவான் பொருளே (பாயப்.43)
- உள்ளவர் பொருட்டோற்கவோ வந்தேனான் (அனந்தக்.25)
- எனவதன் உயர்வும். போக்கு வரவற்ற பொருளே (சின்மயா.4.எந்.பொரு.4)
- மன்னைப் பொருளன் (தன்னை.1) எனவதன் நிலைபேறும்.
- சூழ்வெளிப்பொருள் (வம்பனேன். 6)
- வெட்ட வெளிப் பொருள் (எந்.அருளி.9)
- எனவதன் தன்மையும். தனிவளர் பொருளே (வம்பனேன்.10)
- ஒரு தனிப் பொருள் அளவை (ஆசை.18)
- நீக்கமின்றித் தங்கும் தனிப்பொருள். (எந். பொருளி.13) என அதன் ஒப்பற்ற நிலையும்.
- உயிர்த்திரளை விழுப்பொருளே (ஆகார.7)
- அடியவர்கள் களிக்க நின்றடும் விழுப்பொருளே (பாயப்.54) என விழுமையும்.

---

- சமயாதீதப் பழம் பொருள் (காடுங்.1)
- பழம் பொருளே (எந்.அன்பு.9)
- பந்தத் துயரற்றவர்க்கு எளிய பரமானந்த பரம் பொருளே (தன்னை.7) எனப் பழமையும்.
- பேரின்பப் பொருளே (தன்னையொரு.3)
- பேரின்பம் இதாய்ச் செறியும் பொருள் நீ (தன்னை.4)
- ஆனந்தமாயிருந்த பொருளோடு (ஏசற்ற.9) என இன்ப நிலையும்.
- குன்றாப் பொருள் (அகவல்.4) எனப் பெருமையும்.
- தனிவளர் பொருளே (வம்பனேன்.10)
- நீக்கமின்றித் தங்கும் தனிப்பொருள் (எந்.பொருளி.13) என அதன் ஒப்பற்ற நிலையும்.
- உயிர்த்து இருளை ஆட்டும் விழுப் பொருளே (ஆகார.7)
- அடியர்கள் களிக்க நின்றாடும் விழுப்பொருளே (பாயப்.54)என விழுமையும்.
- தானே மேல் ஆடும் சுகப்பொருள் (எந்.பொரு.2)
- சொல்லுக்கு அடங்கா சுகப்பொருள் (உடல் 25) என அது தரும் சுகமும்
- எங்கும் நிறை பொருளே (ஆசை.2)
- நிறை பொருள் அவை யார் காண்பார்? ((ஆசை.11)
- எங்கு நிறைகின்ற பொருள் (எங்கு.1.11) என எங்கும் நிறை தன்மையும்.
- தீன் பொருளான அமிர்தமே (ஆசை.38) என அதன் என்று உயிரளிக்கின்ற நிலையும்,
- களங்க ரகிதப் பொருளே (பெற்றவம். 10) எனவ தன் தூய்மையும்,
- பொருலளாகியப் பொருளை அறி பொறியும் ஆன (ஆனந்தமான.2)
- பொருளாலாப் பொருள் (ஆனந்தமான. 8)
- பொருள் அனைத்தும் தரும் பொருளே (ஆகார.7)
- எப்பொருளும் நீ எனவே எண்ணி (பரா.69)
- சிந்தை மறந்து திருவருளபால் நிற்பவர்பால் வந்த பொருள் (எந்.பொருளி.8)

- அருள் உருவம் எல்லாம் அகன்றது வாய்ஆன பொருள்(எந்.பொருளி.10)அறிவு ஊடறிவாய் வந்த பொருளே (எந்.பொருளி.17)
- தேட்டாலே தேடு பொருள் (எந்.அன்பர்.4)
- தற்போதம் அற்றவர்க்கு அற்ற பொருள் (எந்.அன்பர்.7)
- அனைத்துமாம் அப்பொருள் (எந்.அறிஞ.7)
- அறிவை அறிவதுவேயாகும் பொருள் (எந்.அறிஞ.14)

என்னும் பல்குறிப்புகள் தவிர, சிவனே அப்பொருள் எனக்கு குறிக்கும்,

  - நிகரில் பசுபதியான பொருளை (பொருள்.12)
- வெண்பொடி பூத்த மேனிச் சுகப்பொருளே (பாயப்புலி.7)
- புவனத்தை உண்டு பண்ணிப் பாங்கா னடத்தும் பொருயே அகண்ட பரசிவமே (பாயப்புலி.9)
- ஐந்து எழுத்தில் உண்மை அதுவான அப்பொருளை (எந்.நிலைபிரிந்தோர்.13) **எனவும்" அமைகின்றன.**

தாயுமானவர் பாடல்களில் ஊடுருவிச் செல்கின்ற கருத்தோட்டத்தில் கிடைக்கும் இறைவனாகிய மெய்ப்பொருள் பற்றிய செய்திகள் எண்ணி எண்ணி இன்புறத் தக்கன.



"பொருள்" எனவும் குறிக்கும் அந்த மெய்ப்பொருளாம் இறையைப் பல்வேறு இன்மொழிகளால் குறித்து அழைத்து இன்பம் அடைகினறார் தாயுமானவர்.

---

அவர் "அகவலில்" விளியாக இறைத் தன்மைகள் அனைத்தையும் கூறுகின்றார்.

"திருவருள் ஞானம் சிறந்துஅருள் கொழிக்கும்

குருவடிவு ஆன குறைவுஇலா நிறைவே

நின்ற ஒன்றே நிர்மல வடிவே

குன்றாப் பொருளே குணப்பெருங் கடலே

ஆதியும் அந்தமும் ஆனந்த மயம் ஆய்

சோதியே சத்தே தொலைவில முதலே (**அகவல்**.1-6)

இறைவனைப் பொதுமைத் தொடர்கள் பயன்படுத்தி அழைக்கின்றமையே தாயுமானவர் பாடலில் மிகுதியாக அமைந்துள்ளன.

அந்தநிலையே தாயுமானவரை ஒரு சர்வசமய சமரச வாதி என்பதை உறுதிபடுத்துகின்றது.



# 7. ஆனந்தமயமான மெய்ப்பொருளே

- உயிர் என்ற மூல சக்தியே எல்லா இயக்கங்களுக்கும் பேராதாரமாக உள்ளது. இது பூரணமானது. எங்கும் என்றும் எப்போதும் எந்த வகையிலும் மாறுபடாமல் நித்தியமாய் சத்தியமாய் இருப்பதால் இதை மெய் என்றும். இந் நிலையை அறியும் அறிவின் செயலை மெய்யுணர்தல் என்றும் சொல்லப்படுகிறது.

இறைவன் என்ற மெய்ப்பொருள் இன்பப் பெருக்காகப் பொழிகின்றான்....இதனை தாயுமானவர் பல அடைமொழிகளால் அந்த இறைநிலையை வர்ணிக்கிறார்.

- ஆனந்த மாமலை பொழியும் முகில் (திருவருள்.1)
- பரம இன்ப வெள்ளப் பெருக்கு (தன்னையொரு.2)
- கரையிலா இன்ப வெள்ளங் காட்டிடு முகில் (ஆசை.14)
- ஆனந்த வெள்ளப் பேராறே (பரா.4)
- இன்பப் பெருக்கு (பரா.5,14) எனவும்
- ஆரா அமுதனைய ஆனந்த வாரி (பல்வகை.24)
- காதலித்த இன்பக் கடல் (பரா.37)
- கரையிறந்த இன்பக் கடல் (பரா.6)
- ஆனந்தக் கடல் (சிவன்.8)

எனவும் நீரோடும் கடலோடும் சார்த்தி மொழிகின்றார்.

## அருட்கடலான மெய்ப்பொருள்......

- அருள்சுரந்து மொழி கருணை முகில் (தேசோ 11)

- அருள் கூறும் கருணை விண் (ஆகார.6)
- கருணை வான் முகிலே (ஆரணம்.4)
- அருளைப் பொழியும் கண முகிலே (தன்னையொரு.8)
- கருணைமழை (பரா.3) எனவும்,
- பொங்கும் கருணைக் கடலே (ஆரணம்.2)
- சுகவாரிதி (சொலற்கரிய.1)
- பெருகிய கருணை வாரிதியே (சிவன் செயல்.8)
- தெளிவற்ற தெளிவான சுத்த சுகக் கடல் (எந்.ஆனந்த.2) எனவும் இவை அமைகின்றன.

## நற்சுகமே இறைவனாவது போல.........

- நற்சுகமே இறைவனாவது போல, பெரு ஒளியும் இறையைக் குறிக்க வந்துள்ளது.
  - பரஞ்சோதி (எங்கும்.5)
  - கன்றிடாத சொழுஞ்சுடர் (பொன்னை.67)
  - வெய்விலாத் தண்அருள் விளக்கே (ஆரணம்.4)
  - சுடர்க் கொழுந்தே (சொலற்கரிய.1)
  - சொரூபனானந்தர் சுடர் (மண்டலத்.5)
  - விளக்கு (பரா.18)
  - உளத்து இளைச்சூறையிட்டு நின்ற பரஞ்சோதி (எந்.பாரு.15)
  - நினைப்பு மறப்பும் அற நின்ற பரஞ்சோதி (எந்.பொரு.19)
  - ஆதியாம் வாழ்வய் கண்டிதமாய் நின்ற பரஞ்சோதி (ஆகாதோ.15)
  - கண்ணிறைந்த சோதி (நல்லறிவே.1)
  - அடிமுடி காட்டாத சுத்தவம்பரமாம் சோதிக் கடுவெளி (எந்.பொரு.14)
  - பரைஎனும் கிரணம் சூழந்த பானு (ஆசை.14)

எனவும் ஒளி நிலையில் இறைவன் படைக்கப்படுகின்றான்.

- இங்குக் கடுவெளியாகக் காட்டப்பட்ட (எந்.பொரு.14)
- இறைவனை, சுகாஆரம்பப் பெருவெளி (பொருள்வகை.1)
- தூவெளிப் பரப்பு (ஆரணம்.4)
- அககண்டப் பரப்பான ஈசா (சொலற்கரிய.3)
- பெருவானமே (சிறசுகோ.3)
- துரியம் கடந்த ஒன்று தூவெளியாய் நின்ற பெரிய நிறைவே (காண்.3)
- சோதியே நந்தாச் சுகவடிவே தூவெளியே (ஆகாதோ8)

எனப் பல இடங்களில் இறையை வெளியாகக் காண்கின்றார் தாயுமானவர்.

- மௌனத்தின் வைப்பு (திருவருள்.2)
- மோனப் பெருக்கே (பரா.4)
- கண்ணிறைந்த மோனக் கருத்தே (காண்.29) என இறையே மௌனத்தின் முழுமையானமையும்.
- ஞான சஞ்சீவியே (சின்மயா.3)
- அமிர்த சஞ்சீவி (சுகவாரி.4) எனச் சாகாவரம் அளிக்கும் தன்மையானதும்
- ஞான வாரிதி (சிவன்.5)
- ஐக்யபதத் தினிதிருந்த விவேகம் (மண்டலத்.6) என அறிவும்.
- புந்திக்குள் நின்ற அருட் பொற்பே (பரா.301)
- உள்ளத் தெளிவே (பரா. ) என இறையே அறிவுக்கு அறிவாய் ஆனமையும் தாயுமானவரால் குறிக்கப் பெறுகின்றன.
- அறிவானந்தத் தாரமுது (தன்னை.8)

- ஆரா அமிர்தம் (தன்னை.9)
- ஆனந்தத் தேன் (பரா.7)
- கடல்அமுது (பரா.32)
- சிந்திக்குந் தோறும் தெவிட்டா அமுதே (காண்.1)
- அண்டனே அண்டர் அமுதே என் ஆருயிரே (வேண்டாவோ,.5)
- “கன்னலுடன் முக்கனியும் கற்கண்டும் சீனியுமாய்
- மன்னும் இன்ப ஆரமுது......” (எந்.ஆந்த.10)

எனவும் முது ஆனமையைத்

- “தேன்ஆகிப் பால் ஆகிக் கனியாய்க் கன்னல்

 செழும்பாகாய்க் கற்கண்டாய் திகழ்ந்த ஒன்றே. (பன்மாலை.5)

எனவும்

- , சிந்தையினுக்கு எட்டாத சிற்சுகம் (எந்.குரு.2)
- “தண்அரும் கருணை பூத்த இனிய கற்பகம் (பம்.10.)
- இன்பஅருட் காவலன் (காண்.2)
- பேரானந்தச் சித்து (தன்னை.9)
- இன்ப வெற்ப (பரா.2)
- ஆனந்த வியப்பு (பரா.10)
- தெய்வச் சுருதி சொன்ன அற்புதம் (பரா.249)
- ஆவிக்குள் ஆவிஎனும்அற்புதனார் (பைங்.3)
- மணியே என் கண்ணே மாமருந்தே (பன்மாலை.8)
- வளர் நெல்லிக்கனி (பரா.8)
- ஆவித்துணையே அருமருந்தே (பலவகை.15)

எனவும் பலவாறாக இறையை வருணித்தும் அவன் பெருமையைச் சொற்களில் வடித்தும் பாடுகிறார் தாயுமானவர்.

## ஆனந்தம் மிகுதியால் தாயுமானவர் இறைவனை......

- **தாயினும் நல்ல தயாளு (காண்.15)**
- **அன்னை போல அருள் மிகுந்து மன்னு ஞான வரதன் (பாடுகின்ற.5)**
- **சத்தான உண்மை (நல்லறி.5)**
- **நின்மலனே (ஆகாதோ.9)**
- **அத்தா விமலா அருளாளா ஆனந்த சித்தா (காண்.30)**
- **சித்தி முத்தி விளைக்கின்ற பூமி (தேசோ.11)**
- **கருணை நீதி (சிற்சுகோ.3)**
- **நற்றவத் துணை (சிவன்.8அறாத நட்புக் கலப்பு (சிவன்.8)**
- **அருள் வேந்தன் (பைங்.17)**

**எனச் சிறு அடைகளோடும்**

- **நவகொள் தத்துவத் திரைஎறி கடலெனும் நலத்தோய் (என்கென்.27)**
- **உள்நின்று உணர்த்தும் உலப்பிலா ஒன்று (காண்.24)**
- **எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபகமாய் உள்ள ஒன்று 9எத்.பொரு.9)**
- **பெண்ஆண் அலி எனவும் பேசாமல் என்அறிவின் கண்ஊடே நின்ற ஒன்று (எந்.பொரு.18)**

---

**எனச் சிறு தொடர்களாகவும்**

**“முத்தே பவளமே மொய்த்த பசும்பொற்சுடரே**

**சித்தேஎன் உள்ளத் தெளிவே பராபரமே (பரா.9)**

**கண்ணே கருத்தேஎன் கற்பகமே கண்ணிறைந்த**

**விண்ணே ஆனந்த வியப்பே பராபரமே (பரா.10)**

**எனச் சிறுசிறு பாடல்களிலும்**

வாழ்வு அனைத்துந் தந்தஇன்ப மாகடலை
நல்ல அமிர்தை மணியைப், பொன்னைத்
தாழ்வுஅற என் உளத்து இருந்த தத்துவத்தை
அத்துவைத சாரம் தன்னைச்,
சூழ்பெரும்பே ரொளியை, ஒளி பரந்தபர
வெளியை, இன்பச் சுகத்தை, மாறாது
ஏழ்உலகும் கலந்து, இன்றாய், நாளையாய்
என்றுமாம் இயற்கை தன்னை. (மண்டலத் 4)

என்பது போலப் பல இடங்களிலும் விரிவாகப் பாடியும், அந்த இறைநிலையை, முழு நிலையில் விளக்க இயலாது என்பதால் போலும்..

“ காரேனும், கற்பகப்பூங் காவேனும்,
உனக்கு உவமை காட்டப் போமோ?

என முடிக்கிறார் தாயுமானவர்.




இவ்வாறு அமையும் மெய்ப் பொருளிடம் தன் விண்ணப்பத்தைத் தாயுமானவர் சொல்லும்போது இறையினிடம் அவர் கொண் அன்பு தெளிவாகின்றது.

விண்ணவர் இந் திரன்முதலோர் நார தாதி,
விளங்குசப்த ரிடிகள், கன வீணை வல்லோர்
எண்ணரிய சித்தர், மனு வாதி வேந்தர்,
இருக்காதி மறைமுனிவர் எல்லாம் இந்தக்
கண் அகல்ஞா லம்மதிக்கத் தானே உள்ளம்
கையில்நெல்லிக் கனிபோலக் காட்சி யாகத்,
திண்ணியநல் அறிவால்இச் சமயத் அன்றோ
செப்பரிய சித்திமுக்தி சேர்ந்தார் என்றும், (ஆகாரபுவனம். 8)

இத்தகைய மெய்ப்பொருளை அறிய, உணர மனிதர்களுக்கு கசக்கவா செய்யும், இந்த மெய்ப் பொருளே இந்த உலகத்தின் தோற்றத்திற்குக் காரணமாக அமைகின்றது.



## 8. தாயுமானவரின் இறைத்தத்துவம்.

தாயுமானவர் ஆனந்தக்களிப்பின் எட்டவது பாடலில் மெய்ப்பொருள் (இறைவனுடைய) தத்துவத்தை கூறுகிறார்.

“உள்ளதும் இல்லது மாய்முன்-உற்ற
உணர்வது வாய்உன் உளம்கண்டது எல்லாம்
தன்னனச் சொல்லிஎன் ஐயன்-என்னைத்
தான் ஆக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி-” (ஆனந்த.8)

தோழி! தோற்றத்தில் இருப்பதும், இல்லாததும் ஆகி, முன்னமே பெற்ற அறிவாய், உன் மனம் கண்டவற்றை எல்லாம் தள்ளிவிடு எனச்சொல்லி, எம் தலைவன், என்னைத் தான் ஆக்கிக் கொண்ட சாமர்த்தியத்தைப் பார்ப்பாயாக!

---

என்னிறைவன், (காரணத்தால்) உள்பொருளும் (காரியத்தால்) இல்பொருளுமாகி, சுட்டியறியத்தக்க பொருளாகி, உன் மனத்தினால் பார்க்கப்பட்ட பொருளாகியுள்ள எல்லாவற்றையம் நீக்கென மறந்து விடும்படி சொல்லி, இறைத்தத்துவ விளக்கம் தந்து என்னை ஆண்டு கொண்ட சாமர்த்தியத்தைப் பார் தோழி.

## உள்ளதும் இல்லது மாய்

மனம் வாக்குக்கு எட்டாதவர் இறைவன். மனதுக்கும் இந்திரயங்களுக்கும் விளங்குகின்ற நிலையில் இருப்பது இப்பிரபஞ்சம்.

இப்பிரபஞ்சம் இறைவன் இல்லாவிட்டால் இருக்க முடியாது.

கயிற்றைப் பாம்பாகக் காண்பது ஒரு மயக்க நிலை. அவ்வாறு இறைவனை இப்பிரபஞ்சமாகக் காண்பது ஒரு மயக்க நிலை.

கயிற்றைப் பாம்பாகக் காண்கின்ற பொழுதும் கயிறுதான் இருக்கிறது. பாம்பு இல்லை.

இல்லாததை இருப்பதாக எண்ணி இருப்பதை அறிந்து கொள்ளாமல் இருப்பதுதான் மயக்கநிலை.

இல்லாத இப்பிரபஞ்சத்தை இருப்பதாக நினைத்து இருக்கின்ற இறைவனை மறந்திருப்பது நம்முடைய மயக்க நிலையாகும்.

இதனைத்தான் தாயுமானவர் “ உள்ளதும் இல்லது மாய்” என்கிறார்.

“முன்-உற்ற உணர்வது வாய்உன் உளம்கண்டது எல்லாம்”

---

பஞ்சேந்திரியங்களுக்குப் புலப்படும் பொருள்களை உள்ளம் பற்றிப் பிடிக்கின்ற பொழுது அவை நம்முடையவை என்று உணர்வு உண்டாகிறது.

அப்படி மனத்தில் உணர்ந்து பற்றிய பொருள்களை நாம் விட்டு விலக முடிவதில்லை.


மனம் தான் பற்றிய பொருள்களில் அழுந்திப்போய் மெய்ப்பொருள் நாட்டம் கொள்ளாதிருக்கிறது. இதனைத்தான் தாயுமானவர் " முன்-உற்ற உணர்வது வாய்உன் உளம்கண்டது எல்லாம்" என்று சொல்கிறார்.

"தன்னனச் சொல்லின் ஐயன்-என்னைத்

தான் ஆக்கிக் கொண்ட சமர்த்தைப்பார் தோழி-"

சிறுநெறியின்கண் செல்லாது சிந்தையை அடக்குவது என்பது கடினமான செயல்.

" சிந்தயையடக்கி சும்மாவிருக்கின்ற சீரறியச் செய்த குருவே" என்பார் வேதாத்திரி மகரிசி.



நமது சிந்தையை இறையாற்றல் மீது திருப்புவது ஒன்றே சிறு நெறியிலிருந்து சிந்தையை மீட்டு எடுப்பதற்கு வழி.

மனிதர்களாகிய நாம் எத்தனையோ கீழான பிறப்புகளுக்குப் பின்பு மனிதப் பிறவி எடுத்திருக்கின்றோம்.

மனிதப் பிறவி எடுக்கும் வரையில் சிந்தையை சிறுநெறியில் செலுத்தி இறைவனை மறந்திருந்தோம்.

இப்பொழுது விளக்கம் கிடைத்தவுடன், விவேகத்தைக் கொண்டு நாம் சிந்திக்கும்பொழுது, இறைவன் ஒருவன்தான் மெய்ப்பொருள் என்றும் மற்றவை அனைத்தும் பொய்ப்பொருள்கள் என்றும் நம் புத்தி சொல்லுகிறது.

ஆனால் நம் புத்தி சொல்லுவதை மனம் ஏற்றுக் கொள்வதில்லை.

மனம் வாசனைக்கு அடிமையாக இருக்கிறது. உலகத்திலுள்ள பற்றைக் குறைப்பதன் மூலமாகவும், பயிற்சியினால் இறை சிந்தனையை வளர்ப்பதன் மூலமாகவும் மனத்தைத் திருத்தி அமைத்தாக வேண்டும்.

ஒழுக்கத்தில் நிறைநின்று இறை சிந்தனையை வளர்த்து வர வர உலகப் பற்று இறைப் பற்றாக மாறுகிறது.

உலகப்பற்று நம்மை உலகுக்கு அடிமையாக்குகிறது. இறைப் பற்று நம்மைக் இறைவனுக்கு அடிமையாக்குகிறது.

## ஐயன் சமர்த்தைப் பார்

---

தெய்வப்பற்றும் தெய்வ நம்பிக்கையும் ஆழ்ந்து உம் உள்ளத்தில் இடம் பெறும் பொழுது உலகப் பொருள்களிலிருந்து மனதை விலக்கி எழுப்புவதற்கு இறைவன் அருள்புரிகின்றான்.

மனம் உலகப் பற்றிலிருந்து விலக விலக இறை தத்துவம் விளங்க ஆரம்பிக்கிறது. இறை தத்துவத்தை அறியும் மனம் அவருக்கு ஆட்படுகிறது.

உலகப் பற்று பழக்கத்தின் காரணமாக ஏற்பட்டது. ஜன்மாந்தர வாசனையினால் ஏற்பட்டது.

இறைவன் அருள்வரும் பொழுது ஜன்மாந்தர வாசனை அழிந்து ஞானஒளி உண்டாகிறது.


ஓர் அறையில் கற்பகாலம் இருள்மூடி இருந்தாலும், விளக்கு ஏற்றினால் நொடிப்பொழுதில் அவ்விருள் மறைந்து விடுகிறது.

ஈசனுடைய அருள் நொடிப்பொழுதில் ஜன்மாந்தர வாசனையை அழித்துவிடுகிறது.

அருளின் சக்தி அத்தகையது. இறைவனுடைய அருள் சக்தி அளப்பரியது என்பதை "ஐயன் சமர்த்தைப் பார்" எனத் தாயுமானவர் கூறுகிறார்.

இறைவன் அருளை நாடியிருந்து ஒழுக்க வாழ்வு வாழவேண்டும் என்பதை இந்தப் பாடலில் தாயுமானவர் சொல்லுகிறார்.

**தத்துவஞானி வேதாத்திரி மகரிசி "இறைநிலையின் தன்மாற்ற சரித்திரம்" என்ற புத்தகத்தில் இறைத்தத்துவத்தை பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவுபடுத்தியுள்ளார்.**




இறைநிலை விளக்கம் இந்த நூலில் முதன்மையாக மதிப்பளிக்கப்பட்டு விளக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தலைப்பில் எழுதப்பட்டிருக்கக் கூடிய உண்மைகளெல்லாம் வேதாத்திரி மகரிஷியின் வாழ்வில் கண்ட உண்மைகளை வைத்துக் கொண்டே எழுதியவை ஆகும்.

அந்த மாற்றம் ஆழ்ந்த ஆராய்ச்சி உடையவர்களுக்குப் பொருத்தமானதாகவே இருக்கும்.

இந்த அடிப்படை மாற்றம் என்னவென்றால் "எல்லாம் வல்ல தெய்வநிலையே, அண்டங்கள் பலநிறைந்த பேரண்டமாகிய பிரபஞ்சமாகவும் எண்ணிலடங்காத கோடிக்கணக்கில் உயிரினங்களாகவும் தன்மாற்றம் அடைந்திருக்கிறது.

---

தெய்வ நிலையைவிட வேறு எந்த ஆற்றலும், சிறப்புகளும் பிரபஞ்சத்தில் இல்லை" என்ற முடிவை அடிப்படையாகக் கொண்டு தான் இறைநிலையே தன்மாற்றம் அடைந்த சரித்திரம் என்ற இந்த நூலில் வேதாத்திரி பதிவு செய்திருக்கிறார்கள்.




மேலும் இந்த நூலில் முதன் முதலாக இறைத்தத்துவம் பற்றிய உலக அறிஞர்கள் கருத்துக்கு அடிப்படையில் ஒரு மாற்றம் இருக்கிறது. மகரிஷியின் நீண்டநாள் ஆராய்ச்சியினால் கண்ட உண்மைகள் இந்த நூலில் வெளியாகி இருக்கின்றன.

# 9. அறிவேதான் தெய்மென்றார் தாயுமானவர்

"அறிவேதான் தெய்மென்றார் தாயுமானவர்" என்று வேதாத்திரி மகரிஷி தாயுமானவரின் அறிவைப் பாடியுள்ளார்.

## மெய் வழி அறிவு வேண்டும்?

உயிர் என்னும் இயக்க ஆற்றலுக்கு மூலமாகவும், இயங்க இடமாகவும், முடிவாகவும் இருப்பது வெட்டவெளியே.

இதுவே எல்லாம் வல்ல முழுமுதல்பொருள். இதன் இயக்கமே உயிர், உயிரின் படர்க்கையே மனம் என்னும் உண்மை உணர்வே அறிவின் முழுமை.

இந்த உண்மையைத் தெளிவாக, தவத்தால் தானே அதுவாகி உணர்ந்தால் பேரியக்க மண்டலம் ஒரே ஒரு தொடரியக்கக் களமாகும்.

அதனினின்று நான் வேறு இல்லை. மற்ற உயிரோ பொருளோ வேறு இல்லை. அந்த முதற் பொருளெ தனது இயல்பூக்கச் சிறப்பால் அனைத்துமாக விளங்குகிறது என்ற நிறைபொருள் அறிவு பூக்கும்.

அவ்விளக்கம் மறவாது உடலோடு உயிர் இயக்கம் நடைபெறும் வரையில், உயிர்கட்கு அறிவாலும், உடலாலும் கடமை செய்து மனிதகுல வாழ்விற்கு வாழிகாட்டியாக வாழ்ந்து நிறைவு பெறுவதே மெய்வழி அறிவாகும்.

மனமே உயிராகி, தெய்வமாகி விரிந்த பேரியக்கங்களை உண்மையினை உணரும் முழுமையில் அறிவாகிறது.

இது தெய்வமே மனித உருவில் அறிவின் முழுமையில் காணும் விளக்கம். இவ்விளக்கம் வேண்டிய மக்கள் அறிந்து கொள் விரித்த கருத்துக்களே வேதம். இதை ஓதியவனும் ஓதியதை உணர்ந்து தானானவனும் ஞானி.

## அறிவையறிதல் எப்படி?

தாயுமானவர் அறிவைப் பற்றி பல இடங்களில் குறிப்பிடுகிறார். அறிவுதான் ஆனந்தம் என்பார்.

அறிவே தெய்வம் என்பார். அறிவே அனைத்தும் என்பார். எனவே அறிவை அவர் எப்படி அறிந்தார். நாமும் அறிந்து கொள்வோம்.

“எல்லா அறியும் அறிவுதனை விட்டு

எல்லாம் அறிந்து ஈங்கொன்றுமில்லை

எல்லாம் அறிந்த அறிவினை நான் எனில்

எல்லாம் அறிந்த இறையென லாமே.” திருமூலர்




அறிவுக்கு மேன்மை நிலையென்றும் உண்மைநிலையென்றும் இரு நிலைகள் உண்டு.

புலன்கள் மூலம் உணர்ச்சிகளாக, இன்ப-துன்ப - அனுபவங்களாக உலகை அறிகிறோம். இது புற அறிவாகும்.

அறிவின் படர்க்கை நிலையான அலைநிலையில் மனமாக இயங்கும் நிலை இது. இதுவே மேன்மை நிலை.

மனதின் உட்பொருளாக உள்ள அறிவுதான் மெய்ப்பொருள் எனும் உண்மையறிவு.

உள் என்ற சொல்லைக் கொண்டு உள்மை, உண்மை என வழங்கப்படுகிறது.

## அறிவு சொரூபமே ஆனந்தம்

“அறிவு சொரூபமே ஆனந்தம்” என்று தாயுமானவர் ஆனந்தக்களிப்பில கடைசிப் பாட்டாக பாடுகிறார்.

---

அன்றுஎன்றும் ஆம்என்றும் உண்டோ-உனக்கு
ஆனந்தம் வேண்டின் அறிவுஆகிச் சற்றே
நின்றால் தெரியும் எனவே-மறை
நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி"

சங்கர சங்கர சம்பு-சிவ,
சங்கர சங்கர சங்கர சம்பு. (ஆனந்த.30)

தோழி! இல்லை என்றும், உண்டு என்றம் பாகுபாடு உண்டோ. உனக்குப் பேரின்பம் தேவைப்படின், அறிவு மயமான சற்றே நின்றால், தெரிந்து கொள்ளலாம். அவ்வாறான மறை நீதியை எம் போன்றோர்க்கு எம் தலைவன் கூறியருளினான்.

வேண்டாம் என்றும் வேண்டும் என்று உலகில் உள்ளதோ? உனக்கு ஆனந்தம் வேண்டின், அறிவுமயமாக அசையாது நின்றால் தெரியும். இதனை என் குருவானவர் எனக்கு உபதேசித்தார்.

## அறிவின் முழுமை பெற்றவர்கள் ஞானிகள்.

"அறிவு" என்பது உண்டா, இல்லையா? இல்லை என்று யாருமே சொல்ல முடியாது.

ஆனால், அறிவு எப்படி இருக்கிறது? எந்த பொருளுக்காகிலும் எந்த விஞ்ஞானதுக்காகிலும் எந்த கருவிக்காகிலும் அடங்குமா? புலன்களால் காண முடியுமா? முடியாது. அப்படியானால் அது என்ன? அரூபம்.

முழு முதற்பொருளாகிய ஆதிநிலை; வெட்ட வெளி; சிவம் என்று சொல்லக் கூடியது அரூபமா, ரூபமா? அதுவும் அரூபம் தான்.

---

அரூபத்தில் இரண்டு இருக்குமா? இந்தக் கேள்வி தான் உண்மையை உணர்த்தக் கூடிய கேள்வி.

ரூபமாக இருந்தால் எல்லை (Volume) கட்டிவிட முடியும். எண்ணிக்கைக்கு உட்படுத்திவிட முடியும். (It would be circumscribed and subject to numbering process)

ஆனால் அரூபம் இரண்டு இருக்க முடியாதே! இரண்டு பூஜ்யம் (zero) என்னவாகும்? ஒரு சைபர் தானல்லவா? அது போல அறிவும் பிரம்மமும் ஒன்று தான்.

அந்த "பிரம்மம்" என்ற நிலையிலே, முழு முதற் பொருளாக, சுத்தவெளியாக, இந்தப் பிரபஞ்சத்தையும் தாண்டி அப்பாலும் சூழ்ந்து உள்ளது.

அதுவே அணுவாகி இயங்கிப் பிரபஞ்சமாக இருந்து கொண்டிருக்கிறது;

அந்தப் பிரபஞ்சத்தில், ஒவ்வொரு பொருளிலும், தன்மையிலும் இருந்து கொண்டு உயிர்களில் இவைகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய ஆற்றலாகவும் இருக்கிறது.

ஒரே ஒரு பொருள்; பல இயக்கங்கள். இந்த உண்மையை மனிதன் உணரும்போது தான் ஆறாவது அறிவு முழுமை பெறுகிறது.

ஆறாவது அறிவு முழமைப் பெற்றவர்களை ஞானிகள் என்று அழைக்கிறோம்.

ஞானநிலை பெற்ற ஞானிக்கு நீக்க வேண்டியது எதாவது இருக்கிறதா? கொள்ள வேண்டியது எதாவது இருக்கிறதா?

"நன்றே செய்வாய் பிழை செய்வாய். நானோ இதற்கு நாயகம்" என்பது ஞானியின் வாக்கு.

உலகில் நிகழும் நிகழச்சிகளுக்கெல்லாம் ஞானி சாட்சிமயமாக இருக்கின்றான்.

உனக்கு உண்மையான ஆனந்தம் வேண்டும் என்றால் “நீ அறிவுடன் இருந்தால் உனக்கு தெரிந்து விடும்.”

பரமாத்மா சீவாத்மா அறிவை அறிந்து ஞானத்தில் நின்றால் உனக்கு ஆனந்தம் வந்துவிடும்.

அறிவை அறிவதுதான் இலட்சியம். ஞானத்தை அடைந்து அதில் நிலைத்தால் ஆனந்தம் கிடைக்கும்.

## இறைநிலையில் பேரறிவு

இப்போது நாம் வெளியே உலகில் வந்து விட்டோம். எல்லோரும் உலவிக் கொண்டு இருக்கின்றோம்.

அம்மா வயிற்றில் உருவான போது இறையாற்றல் எப்படி மேலும் அதைக் காப்பாற்றியது பாருங்கள்.

தாய் வயிற்றில் குழந்தை இரண்டு மாதம் ஆனபொழுது குழந்தையின் உடம்பைச் சுற்றி நீரால் ஆகிய ஒரு பை (Water bag) அமைகிறது.

நாம் கட்டிலில் ஒரு திண்டு போட்டு வைத்திருக்கிறோமே, அது போல மேல்நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் நீர் பை (Water bag) என்று ஒன்றை கட்டிலில் போட்டு வைத்திருப்பார்கள்.

ஏன்? அதில் படுத்தால் எப்படி இருக்கும்? அவ்வளவு அருமையாக இருக்கும்.

அது போல் தாயின் வயிற்றில் குழந்தைக்கு இரண்டு மாதம் ஆனால் போதும் நீரால் ஆன பை (Water bag) உருவாகிறது. ஏன்?

அதற்கும் மேலாக குழந்தை வளர்ச்சியுறும் போது அந்தக் குழந்தையை தாங்கிக் கொண்டிருக்கிற தாய் அப்படி இப்படி நடக்க வேண்டி வரும்.

படுக்கும் போது பிரழும்படி இருக்கும். ஒவ்வொரு பொருளும் எடுக்கும்போது குனிய வேண்டியதாய் இருக்கும்.

அப்போது எல்லாம் அந்தக் குழந்தைக்கு அழுத்தம் கொடுக்கக் கூடாது. அது நைந்து போகக் கூடாது.

அதற்காகதான் நீர் பை (Water bag) அமைகிறது. நீர் பைக்குள் குழந்தை இருக்கிறது. அது அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்கிறது (Shcok Absorver).

இரு ஒரு அனுமானம் அல்ல. இது எல்லோருக்கும் தெரியும். இதுதான் இறைநிலையின் பேரறிவு. அறிவு என்பது இயக்க ஒழுங்கு (Order of function) எதையும். ஒழுங்காக இயக்குவது அறிவு.

எல்லாப் பொருட்களிலும், எல்லா இடங்களிலும் இயக்க ஒழுங்காக இருப்பது அறிவே. (Consciousness is the order of function in everything and in everywhere).

இந்த நீர் பையை யார் செய்தது? அம்மா-அப்பா செய்தார்களா? நண்பர்கள் செய்தார்களா? அரசாங்கம் செய்ததா? யாரும் செய்யவில்லை. இயற்கையின் பேரறிவுதான் இயக்க ஒழுங்காக விளங்குகிறது.

## அறிவை அறிந்த அறிவு.

ஆன்மீகத் துறை என்பது அகநோக்கு பயிற்சி மூம் அறிவை அறிவில் நிறுத்தி, அதனுடைய இருப்பிடம், இயல்பு. இயக்கம், விளைவு இவைகளைக் கண்டு,

அதே சக்தி நான் என்று சொல்கின்ற போது வேகமாகவும், ஞாபகமாகுகவும் இரு நிலையாக ஒன்று சேர்ந்து இயங்குகழன்ற தன்மையைக் கூர்ந்து ஆராய்ந்து அறிந்து கொண்டு,

அதே சக்தி கோடானு கோடி உடலியக்க உருவங்களில் அவ்வற்றிற்கு ஏற்ற அறிவியக்கமாகவும் சிறப்புற்று விளங்குவதை அறிந்து கொள்வதாகும்.

இந்நிலையே பேரறிவு என்றும் சொல்லப்படும். அறிவாக இருக்கின்ற அரூபா ரூப சக்தியை அறியுமிடத்து, அதன் மூலமாகவும், ஆதியாகவும் இருக்கின்ற அகண்ட, பூரண பேராதார சக்தியும் அறியப்படும்.

இதுவரை புலனுணர்ச்சிகளைக் கொண்ட “இந்த உருவம் வரையில் நான்” என்று ஒருவன் எண்ணியிருந்த நிலை விரிந்து, அரூபச் சக்தி நிலையில் எங்கும் நிறந்தியங்குகின்ற சக்தியாக அவனே இருக்கின்ற நிலையை அறிந்து கொள்ளுகிறான்.

இவ்விரிந்த அறிவின் நிலையில் இருக்கிற அவன், இன்ப துன்பங்களை உணருகின்ற அனுபவிக்கின்ற கோடானு கோடி

உயிரினங்களின் தேவை, அனுபோகம், அனுபவங்கள், கடமையாவையும் அறிந்து அதற்கேற்பச் செயலாற்றி வாழ முற்படுகிறான்.

## அன்றுஎன்றும் ஆம்என்றும் உண்டோ"

உலகத்தில் வெறுப்புக்கும் விருப்புக்கும் இடமுண்டு. துன்பம் தருபவகைளை விருப்பததிற்குரியன அல்ல என்று ஒதுக்குகின்றாம். அவை வெறுக்கத்தக்கன என்றும் நினைக்கின்றோம்.

அதே போன்று இன்பம் தருபவைகளை வெறுக்கத்தக்கன அல்ல என்றும், விருப்பத்திற்குரியன என்றும் எண்ணுகின்றோம்.

உலகத்தில் இன்பம் தருபவைகளையும் துன்பம் தருபவைகளையும் நாம் ஏற்று அவைகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

உலக இன்பம் உண்மையில் இன்பமன்று. உலகத் துன்பமும் துன்பமன்று.

மனதில் உள்ள அழுக்கே இன்ப துன்பமாக வடிவெடுத்து வருகிறது.

எனவே உலகத்தில் நம்மைத் துன்புறுத்துவதற்கோ, இன்புறுத்துவதற்கோ ஒன்றுமில்லை. இதனைத் தாயுமானவர் அன்றுஎன்றும் ஆம்என்றும் உண்டோ" என்று கூறுகின்றார்.

"உனக்கு ஆனந்தம் வேண்டின் அறிவுஆகிச் சற்றே

நின்றால் தெரியும் எனவே-மறை
நீதிஎம் ஆதி நிகழ்த்தினான் தோழி"

நிலையான ஆனந்தம் வேண்டுமென்றால் மெய்ப்பொருளிடத்தில் மனதை நிலை நிறுத்த வேண்டும்.

மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்திலிருந்துதான் ஆனந்தம் தோன்றுகிறது.

உண்மை எது என்று நமக்குத் தெளிவாக விளங்கிவிட்டால் மனம் உலகத்தில் வரும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளைக் குறித்துச் சிறதும் அசைவதில்லை.

வேதங்கள் உலகம் அநித்தியமானது என்றும் மெய்ப்பொருள் ஒருவரே நித்தியானமானவர் என்றும் கூறுகின்றன.

உலகப்பொருள்களில் உள்ள பற்றுதல்தான் இன்ப துன்பமாக வடிவெடுத்து வருகின்றது என்பது வேதம்.

இப்பொழுது நாம் காணும் உலகக் காட்சி மனதினுடைய குறைபாடே ஆகும்.

மனதிலுள்ள மாசு நீங்கும்போது இவ்வுலகம் தெய்மாகத் தென்படுகிறது என்று வேதம் கூறும் இத்தத்துவத்தை ஞானகுரு நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

வேதத்தைக் கற்பதனால் உண்டாகும் வாசா ஞானம் குருவினுடைடைய கிருபையினால் அனுபவமாக மாறுகிறது.

## பேரின்ப வெள்ளம்

---

அன்பும் கருணையும் உடைய தெய்வ நிலையானது விண் முதல் ஆறறிவாகி, மனித மனத்தின் மூலம் தனது பரிணாமப் பயணச் சரித்திரத்தை உள்ளுணர்வாகக் காட்டிய பேரறிவிற்கு நன்றி கூறுமிடத்து, அத்தகு உள்ளுணர்வு அடைந்த நம்மையே இறைநிலைக்கு அர்ப்பணம் செய்து மகிழ்ச்சியடைவோம்.

மேலும் உலக வாழ்வில் உயிரினங்களின் உற்பத்திக்கு ஏற்ற வகையில் பெண்ணினத்தை வடிவமைத்து எல்லா உயிர்வகைக்கும் அன்பு காட்டி, கருணையை வழங்கிக் காக்கும் அந்தப் பேராதார இறைநிலைக்கு நன்றி கூறி மன நிறைவு பெறுவோம்.

எல்லா உயிர் வகைகட்கும், உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும், சிக்கலில்லாமலும், வரையறை இன்றியும், தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள்.

அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும், கருணையோடும் உருவாக்கி, இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும், கருணைக்காகவும் இறைநிலைக்கு நன்றி கூறி, அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்.

ஒவ்வொரு நாளையும் இறைநிலையின் அன்பின் ஊற்றுப் பெருக்க நன்னாளாகவே கருதி என்றும் கொண்டாடுவோம்.

## என்றென்றும் ஆனந்தம்!

இன்பம் என்றால் என்ன?

பணமா, பதவியா, குழந்தைகளா... இவை எல்லாம் தான் இருக்கிறதே! சரி...இதனால், நீங்கள் நிம்மதி அடைந்து விட்டீர்களா?

---

பணம் கூடக்கூட வீட்டில் பிரச்னை; பதவி உயர உயர சோதனை மேல் சோதனை! குழந்தைகள் சிறுவயதில் இருப்பது போல், திருமணத்துக்கு பின் இருப்பது இல்லை.

எல்லாம் இருந்தாலும், நிம்மதி என்ற ஆனந்தம் இல்லை. அப்படியென்றால், எப்போது தான் நாம் எதிர்பார்க்கிற ஆனந்தம் கிடைக்கும் என்றால், பிறவாமலே இருந்தால் தான் கிடைக்கும்.

''ஐயோ... நான் பிறந்து அனுபவித்ததெல்லாம் போதும் சாமி; இனியொரு பிறவி வேண்டாம்...' என மனிதன் தன் வாழ்நாளில் ஒருமுறையாவது வாய்விட்டு சொல்லி விடுகிறான் அல்லது மனதுக்குள் நினைக்கவாவது செய்கிறான்.

சரி...பிறப்பற்ற நிலையாகிய நித்ய ஆனந்தத்தை அடைய என்ன செய்வது?

நடராஜப் பெருமானின் திருவடி தரிசனமே பிறப்பற்ற நிலையைத் தரவல்லது. அவரை வணங்க அனைத்து நாட்களும் சிறப்பானவை தான் என்றாலும், ஒரு ஆண்டின் ஆறு நாட்கள் மட்டும் சிறப்பாக சொல்லப்பட்டுள்ளன. அதில், முக்கியமானவை மார்கழி திருவாதிரையும், ஆனி உத்திரமும்.

மகாவிஷ்ணுவின் படுக்கையான ஆதிசேஷன், ஒரு நாள், பெருமாளின் பாரம் தாங்க முடியாமல் அதற்கான காரணத்தைக் கேட்டது.

அதற்கு பெருமாள், ''சிவனின் ஆனந்த நடனக்காட்சியை கண்டு களித்தேன். அவரது திருவடி அசைவைக் கண்டு, ஏற்பட்ட மகிழ்ச்சியால் என் உடல் பெருத்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அதனால் தான், உனக்கு பாரம் தாங்க முடியாமல் போனது...' என்றார்.

‘‘அவரது திருவடியையும், அந்த அற்புத நடனத்தையும், நானும் பார்க்க வேண்டும்...' என, பெருமாளிடம் கேட்டது ஆதிசேஷன்.

அவரது அனுமதியுடன், கைலாயம் சென்று சிவனை எண்ணி தவத்தில் ஆழ்ந்தது. அதற்கு காட்சியளித்த சிவன், ‘‘ஆதிசேஷனே... தில்லையில் புலிக்கால் முனிவர் என் நடனத்தைக் காண விரும்பி, தவம் செய்து வருகிறார்.

நீ, அங்கு மனித ரூபம் தாங்கி செல். அங்கே என் திருவடி தரிசனமும், நடனக்காட்சியும் காணலாம்...' என்று அருள்புரிந்தார்.

நடராஜருக்கு, தினமும் புத்தம் புதிய மலர்களால் பூஜை செய்து வந்தார் புலிக்கால் முனிவர். மரங்களில் பற்றி ஏறி பூப்பறிக்க வசதியாக புலிக்காலும், இருளில் கூர்மையாக தெரியும் கண்களையும் சிவன் மூலம் பெற்றிருந்தார்.

சமஸ்கிருதத்தில் இவரை, ‘‘வியாக்ரபாதர்' என்றனர். ‘‘வியாக்ரம்' என்றால், புலி. ‘‘பாதர்' என்றால், பாதங்களை உடையவர். புலியின் கால்களை உடையவர் என்று இதற்கு அர்த்தம்.

பூமியில் மனிதனாய் பிறக்க விரும்பிய ஆதிசேஷன், அத்திரி மகரிஷி- அனுசூயா தேவி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார்.

அவருக்கு, ‘‘பதஞ்சலி' என்று பெயரிடப்பட்டது. அவர், பாம்பின் அம்சம் என்பதால், மனிதத் தலையும், பாம்பு உடலும் பெற்றிருந்தார்.

வியாக்ரபாதரிடம் சென்று சிவனின் நடனத்தைக் காணும் ஆவலைத் தெரிவித்தார் பதஞ்சலி. இருவரும், சிவபெருமான் நடன தரிசனம் தரும் நன்னாளுக்காகக் காத்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது. அதைக் காண, இந்திரன் உள்ளிட்ட தேவர்கள் கூடினர். பிரம்மா, விஷ்ணு, லட்சுமி, சரஸ்வதியும் வந்து சேர்ந்தனர்.

துந்துபி, பானுகம்பன் போன்ற தேவலோக கலைஞர்கள் வாத்தியம் இசைத்தனர். பேரொளி ஒன்று அவர்கள் கண் முன் விரிந்தது.

நந்திகேஸ்வரருடன் கருணையே வடிவான நடராஜப்பெருமான் எழுந்தருளினார். சிவகாமி என்னும் பெயர் தாங்கிய பார்வதி அருகில் நிற்க, சிவன் ஆனந்த திருநடனம் ஆடினார். வியாக்ரபாதரும், பதஞ்சலியும் ஈசனின் திருநடனத்தைக் கண்டு, மகிழ்ந்தனர்.

ஆனி உத்திரம் திருநாளில், சிவாலயங்களில் நடராஜருக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்படும். அவரது திருவடியை தரிசிப்பவர்கள் ஆனந்தமயமான நிலையை அடைவர்.

## எங்கும் எதிலும் ஆனந்தம் - தாயுமானவர்

இறைவனே! ஆனந்தத்தின் மொத்தவடிவம். ஆனந்தம் பெறவே உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

உழைப்பதும், உண்பதும், ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு வாழ்வதும் எல்லாம் ஆனந்தத்தின் பொருட்டே. நம்மால் என்றுமே ஆனந்ததை விடுத்து வாழவே முடியாது.

எங்கும் ஆனந்தமே. எதிலும் ஆனந்தமே! இதற்காகவே, இறைவனும் சிற்சபையில் ஆனந்த நடமிடுபவனாக இருக்கிறான்.

இறைவன் எல்லா திசைகளிலும் நிறைந்திருக்கிறான். நம் இதயத்தாமரையாகிய மனத்தில் தேனாக இருந்து தித்திக்கும் இனிமை உடையவன் இறைவன்.

அவனையே எப்போதும் சிந்திப்போமாக.பொருளின் மீது நாட்டம் கொண்டவனுக்கு அருட்செல்வம் என்றும் எட்டாக்கனியாகும்.

திருவோட்டையும், செல்வமாகிய நிதியையும் ஒன்று போல காணும் உத்தமர்களின் நெஞ்சத்தை தன் இருப்பிடமாக கொண்டிருப்பவன் இறைவன்.

குழந்தையின் மனதில் தான் என்னும் அகங்காரம் இல்லை. இவர் நல்லவர், கெட்டவர், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதங்கள் தெரிவதில்லை.

மனிதனும் குழந்தை போல வெள்ளை உள்ளம் கொண்டால் அவனே ஞானியாவான்.வாழ்வில் எத்தகைய துன்பம் நேர்ந்தாலும் மனம் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது இறையுணர்வில் எப்போதும் இருக்க வேண்டும். ஞானம் கைவரப்பெறும்.

ஞானத்தினால் வரும் ஆனந்தம் நிலையானது. இதுதான் வாழ்வில் இலட்சியம்.



ஆனந்தம் நான்கு வகையில் கிடைக்கலாம்

- பொருள்கள் மூலம் கிடைக்கும் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- வைராக்கயத்தின் மூலம் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- அறிவால் ஆசைகைளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.
- ஞானத்தால் ஆசைகளை நீக்கி ஆனந்தத்தை அடையலாம்.

அறிவினால் ஆசையைப் போக்கிவிட்டால், ஆசைகளை சீரமைத்துவிட்டால் பேராசைகள் போய்விடும். ஆனந்தம் நிலைத்து நிற்கும். பூரண திருப்தி கிடைக்கும்.

அறிவு நிலைத்துவிட்டால் பொறாமைப்படும் மனது அழிந்து விடும். கோபப்படும் மனது அழிந்து விடும். விருப்பு வெறுப்புள்ள மனம் அழிந்துவிடும்.

அழகான மனதுடன் இருப்போம். அறிவின் லட்சணம் "நான் ஆனந்த சொரூபம்."

உனக்கு ஆனந்தம் வேண்டின் அறிவில் நில். ஆனந்தத்தில் வரும் களிப்பினை நான் இதுவரை சொன்னேன் என்று தாயுமானவர் ஆனந்தக்களிப்பினை முடிக்கிறார்.

"ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே

வாழத்தெரிந்திடில் ஆனந்தமே"

நன்றி. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு - மன்னார்குடி பானுகுமார்

# 10. மெய்ப்பொருள் எங்கிருக்கிறது?

மெய்ப்பொருள் எங்கிருக்கிறது என்ற ஆறு கேள்விகளை நம்மிடமே வைக்கிறார் தாயுமானவர்.

1. **அங்கு எங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்டவெளி முழுவதும் எங்கும் நிறைந்து விளங்கும் ஒளிமயமாகி. உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் நிறைவான ஒன்றாகி, தனது திருவருளாகிய சக்தியோடு கூடி, எங்குமாய் நிறைந்து நின்ற பொருள் எது?**
2. **தனது திருவருளாக விளங்கும் ஆகாயத்தின்கண் அண்ட கோடிகள் அனைத்தும் தங்குமாறு விரும்பி இடம் கொடுத்து, உயிருக்கு உயிராய் நின்று, அவ்வுயிர்களைத் தழைக்கச் செய்தது எது?**
3. **மனத்துக்கும் வாக்குக்கும் தட்டுப்படாமல் நின்றது எது?**
4. **சமயகோடிகள் பலவும், "இது எங்கள் தெய்வம், இது எங்கள் தெய்வம்!" என்று எவ்விடத்தும் தங்களுக்குள் தொடர்ந்து எதிர்வழக்கு ஆடும்படி செய்த பொருள் எது?**
5. **எல்லா இடங்களிலும் பேசப்படுவதும், எல்லாப் பொருள்களையும் இயக்கும் அறிவாய் விளங்குவதும்,**

**உயிர்களுக்கு இன்பப் பேற்றினை வழங்குவதும் எல்லா காலத்திலும் நிலைத்து நிற்பதும், ஆகிய பொருள் எது?**

6. **மேலான இரவுபகல் அற்ற எல்லையில் உள்ள பொருள் எது?**

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் 1)

---

இந்த ஆறு கேள்விகளுக்கும தாயுமானவரே பதிலும் சொல்கிறார்.

எது?எது? எது? என்ற கேட்ட - அந்த அது - நம்முடைய கருத்திற்கு இசைந்தபொருளே.

அந்தப் பொருளையே கண்ணால் காணும் பொருள்கள் அனைத்துமாகவும், மௌனமே உருவமான வெளியாகவும் (வெட்டவெளியாகவும், சுத்தவெளியாகவும். அருள்வெளியாகவும், தூய ஒளியாகவும்) நினைத்து வணங்குதல் செய்வோம்.

வெளி என்றால் என்ன? விடையாக வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

"வற்றாயிருப்பு, பேராற்றல், பேறறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்" என்கிறார்.

"அருட்பெருவெளியில் அருட்பெருவுலகத்து

அருட்பெரும் தலத்து மேல் நிலையில்

அருட்பெருஞ் ஜோதி என்னரசே?

தாயுமானவரும், வள்ளலாரும், வேதாத்திரியாரும் ஒரே மூலத்திலிருந்து மலர்ந்ததுதான் அனைத்தும் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார்கள்.

அந்த மூலத்தை பெருவெளி என்றார் வேதாத்திரியார்.

அருட்பெருஞ்ஜோதி என்றார் வள்ளலார்.

இந்த கருத்தில் வேதாத்திரி மகரிஷியின் ஒரு பாடல்,

---



ஆதி நிலை வெட்டவெளி அதுதான் மெய்ப்பொருளாகும்

அசையும் நிலை அணுகாந்தம் அதை உயிர் என்று

உரைக்கின்றோம். சோதி, சப்தம், சுவை, மணங்கள், சொரூபம் இவை அனுமின் சக்தி

தொடர்ந்தியங்கும் நிகழ்ச்சிகளாம் சய உணர்வே அறிவாம்." (ஞாக.1157)

இதில், ஜீவன் உயிர் என்றும், அகம் சுய உணர்வாகவும் எடுத்தாளப்பட்டுள்ளது.

"பார் அறியாது அண்டப் பரப்பு அறியாது உன் பெருமை

யார் அறிவார் நானோ அறிவேன் பராபரமே" (தாயுமானவர்)

"உலகம், அண்டங்கள், உயிரினங்கள், பொருள்கள்

பலதும்அணுமின் கூட்டுப் பக்குவப் பரிணாமம்" (வேதாத்திரி)

---

“அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக்கு அப்பாலும்

கொண்ட நின்னை யார் அறிந்து கொள்வார் பராபரமே” (தாயுமானவர்)

“ .....பரவெளியில் காணுகின்ற பலகோடி அண்டங்கள் தாதுசேர்க்கை

பரநிலையை உயிர் உணர்ந்து பல இயக்க விதியுணர்ந்தால் பரமானந்தம்” (வேதாத்திரி)

“ஒப்பு உயர்வு ஒன்று இன்றி ஒலிபுகா மோனவட்டக்

கப்பலுக்கு ஆம் வான் பொருள்நீ கண்டாய் பராபரமே” (தாயுமானவர்)

“பஞ்ச பூதங்கட்கு அப்பால் ஒன்றுண்டு எனில்

பரம் பொருளாம் வெட்ட வெளியே” (வேதாத்திரி)

பார்க்கின் அண்டபிண்டம் பரப்பு அனைத்தும் நின் செயலே

யார்க்கும் செயல் இலையே ஐயா பராபரமே” (தாயுமானவர்)

“வேகம், பரும்ன, காலம், தூரம் என்ற விதம் நான்காய் பரம்பரம் அணுவாயிற்று

வேமாய் அணு இயங்க வெளி அழுத்த விளையும்

தொடர் நிகழ்ச்சிகளே பிரபஞ்சம் ஆம்” (வேதாத்திரி)

---

இவ்வாறு இன்னும் எண்ணற்ற பாடல்களில் வெட்டவெளி தத்துவத்தைப் பற்றி தாயுமானவரும் வேதாத்திரியாரும் பாடியுள்ளனர்.

பிரபஞ்ச இயக்கம் பற்றிய இவர்களின் பாடல்களும் உண்டு.

"பார் ஆதி பூதம் எல்லாம் பார்க்குங்கால், அப்பரத்தின்

சீர் ஆக நிற்கும் திறம் கண்டாய்.." (தாயுமானவர்)

"பெருவெளியாம் எலலையற்ற பேரண்ட அகத்தினிலே

பிரபஞ்சம் என்ற ஒரு பேரியக்கம் நிகழ்கிறது

ஒருவெளியின் அழுத்தமும் உளவெலாம் உருண்டியங்கி

ஒன்றை ஒன்று தள்ளி ஓடும் உண்மையினை நாம் உணர்ந்தோம்"
(வேதாத்திரி)

ஒன்றாய் இருந்த பிரம்மம் ஏன், எப்படி பலவாகி பரிணாமம் ஆகி நிற்கிறது என்பது தொன்று தொட்டு இருந்து வரும் கேள்வி. மூலம் ஏன், எப்படி இந்த ஞாலமாக மாறுகிறது என்ற கேள்வி வள்ளலாரிலும் எழுகிறது.

"ஆதி அந்தம் என்றுரைத்தார் வெண்ணிலாவே - அந்த

ஆதி அந்தம் ஆவதென்ன வெண்ணிலாவே

வித்தில்லாமலே விளைந்த வெண்ணிலாவே - நீ

விளைந்த வண்ணம் ஏது சொல்லாய் வெண்ணிலாவே.

---

## மூலம் ஒன்றே

சிந்திக்க சிந்திக்க அறிவு நுண்மை அடைந்தது. மறை பொருள் உணர்நிலைக்கு அறிவு உணர்ந்தது.

தோற்றங்கள் அனைத்தும் விண்ணின் யகூட்டுதான் என்ற தெளிவு வந்த போது விண்ணைவிட பேரியக்க ம்ணடலத்தில் வேறு என்ன உள்ளது என்ற சிந்தனையில் எல்லையற்ற இறைவெளி அவன் அறிவுக்கு எட்டியது.

வெளியிலிருந்து விண் தோன்றி இருக்குமா? அல்லது விண்ணிலிருந்து வெளி தோன்றியிருக்குமா? என்ற சிந்தனையில் வெளியிலிருந்து தான் விண் தோன்றி இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தான்.

இந்த அறிவு நிலைக்கு வருவதற்குள் இந்த நில உலகில் எத்தனையோ மாற்றங்கள் மனித வாழ்வில் நிகழ்ந்து விட்ன.

முடிவாகக் கண்ட தெளிவு இறைவெளிதான் தெய்வம் அது அரூபமானது. எங்கும் நிறைந்தது. அதிலிருந்து தான் விண் முதல் அனைத்தும் தோன்றி அந்த இறைவெளியிலேயே மிதந்து இயங்கிக் கொணடிருக்கின்றன.

உலகில் வாழும் எல்லோரும் ஒரே மூலத்திலிருந்து வந்தவர்வர்கள் தான் என்ற கருத்து பரவியது.

எனவே, நாம் எந்தப் பொருளைப் பார்த்தாலும் தோற்றம், அணுக்கூட்டு, பரமாணு, அதனுள் மெய்ப்பொருள் என்று பார்க்கப் பழகிக் கொள்வோமாக!

# 11.நிறைவாக..............

மனதுக்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்ட மூ ல மெய்ப்பொருள் எத்தன்மைத்து என்று ஞானிகளாலும் விளக்குதல் எளிதல்ல.

மெய்ப்பொருளைக் காண்பதுவே அறிவுடைமை என்று தமிழ் மக்களுக்குப் பண்டை நாளிலேயே அறிவுரை வழங்கியவர் திருவள்ளுவர் ஆகும்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு (திருக்குறள்)

***மெய்ப் பொருள் உணர்வை அழுந்தக் கூறிய காரணம்.***

தாயுமானவர் பாடல்களில் மெய்ப் பொருளைக் குறித்துப் மூன்று இடங்களில் இந்த நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புராணக் கதைகளும் உருவ வழிபாடும் தழைத்தோங்கிய போது தாயுமானவர், மூல மெய்ப் பொருளுக்கு மிக்க முக்கியத்துவம் தரக் காரணம் என்ன என்று சிந்திக்கத் தக்கது.

மக்களுக்குப் பக்தி மார்க்கத்தைப் புகுத்திய நாயன்மார்களும், ஆழ்வார்களும் மறைந்த பின்னர், அடுத்த சில நுற்றாண்டுகளில் சைவ, வைணவ சமயத்தைச் சார்ந்த அடியார்களுக்குள் இருந்த வேறுபாடுகள் மிகுந்து பெரும் பூசல்களாக உருவெடுத்தன.

ஒரு ஊருக்குப் போகும் வழியை ஊராகவே எண்ணும் நிலையும் உருவாகியது.

உருவ வழிபாடு என்பது, உரு, அருவற்ற முழு முதற் பொருளை மனத்தில் நிலைக்கச் செய்தற்கும், உணர்தற்கும் தவமே வழியாகும் என்பதை மக்களுக்கு நினைவூட்டும் பொருட்டே என்பதே தாயுமானவர் பாடல்கள் என்ற ஞான நூலின் சமயப் பொருண்மையாகும்.

தத்துவக் கருத்துக்களுக்கும், வழி பாட்டு முறைகளுக்கும் நிலவிய இடை வெளியைக் குறைப்பதே இந்நூலின் நுண்ணிய கருத்து எனலாம்.

அருள் நெறியில் முன்னேறி மெய்ப் பொருளுடன் ஒன்றிட விரும்புவோர்களுக்குக் தாயுமானவர் பாடல்களில் கூறப்பட்ட உத்திகள் பயன்படும்.

மெய் உணர்வுக்குத் தடையாய் இருப்பனவற்றை அகற்றி, உற்ற நெறிகளை ஒதஇற்று, வழி படும் தெய்வங்களை, வரங்கள் தரும் கற்பகத் தருவாகக் கருதாமல், பரத்தின் கண் மனத்தை நிறுத்திப் பக்குவப்படுத்தும் பற்றுக் கோடாக எண்ணும் மனப்பான்மை இக்காலத்துக்குப் பொருத்தமானதாகும்.

தாயுமானவர் பாடல்கள் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட நூல். இதில் கூறப்பட்ட மெய்ப் பொருள் தத்துவங்களும், அற நெறிகளும் காலத்தினால் மாறுபடாமல் அன்று போல் இன்றும் நிலைத்து நிற்கின்றன.

**“எல்லாரும் இன்புற்றிருக்க”என்ற எண்ணத்தோடு குறிக்கோளாடு வாழ்வாங்கு வாழ்ந்த மகான் தாயுமானவர் அவர்களாவார்.**

**அவர்களின் படைப்பு பனுவல்களை இவன் நோக்கப் பெற்ற “தாயுமானவரின் பாடல்கள்” நுலாகும்.**

**உயர் கருத்து நலன்கள், அவற்றுக்கு ஊறு செய்யாத எளி இனிய உவமை முதலிய அணிநலன்கள், நெஞ்சில் பதியும் யாப்பு வடிவங்கள், எளிமையான நடை நலன், ஆகியவற்றின் கலவையாய்**

**அமைந்த தாயுமானவரது பாடல்கள் கருத்துப் பெட்டகமாகவும், கலைப்படைப்பாகவும் கவின்முகங்காட்டுகின்றமையை "தாயுமானவர் பாடல்கள்" நமக்கு நன்குணர்த்துகின்றது.**

